அமரகோஸம்

பாகம் II





தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

Thanjavur Sarasvati Mahal Series No. : 458

अमरसिंहविरचितः

अमरकोशः

அமரகோசம்

(தமிழ்க் குறிப்புரையுடன்)

இரண்டாம் தொகுதி

(5வது வர்கம் முதல் 12ஆம் வர்கம்வரை)

பதிப்பாசிரியர்

வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்,

என். ஸ்ரீநிவாஸன்

முதுநிலை ஸம்ஸ்கிருத பண்டிட்

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2007] [விலை: ரூ. 8

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: அமரகோசம்-இரண்டாம் தொகுதி
பதிப்பாசிரியர்	: என். ஸ்ரீநிவாஸன்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	: 458
மொழி	: ஸம்ஸ்கிருதம், தமிழ்
பதிப்பு	: இரண்டாம் பதிப்பு
வெளியீடு	: மார்ச், 2007
தாள்	: TNPL 17.8 kg.
நூல் அளவு	: 24 செ. மீ. X 14. செ. மீ.
பக்கங்கள்	: 188
படிகள்	: 500
எழுத்து	: 16 மற்றும் 12 புள்ளி
அச்சிட்டோர்	: ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: நிகண்டு
பகுப்பு	: P15,C 4 x1,1 31 P 02.1
விலை	: ரூ. **80-00**

வெளியீட்டாளர் முகவுரை

இந்திய நாகரீகத்தின் வெளிப்பாடாகத் தோன்றும் வேதங்கள் வடமொழியில் அமைந்து அவற்றைத் தொடர்ந்து இலக்கியங்களும் இதிகாசங்களும் புராணங்களும் இந்தியப் பண்பாட்டின் விளக்கங்களாகத் திகழ்கின்றன.

வடமொழி பயிலும் யாவரும் தங்களுக்குத் தேவையான சொற்களின் பொருளை அறியத் துணை நிற்பவை கோசங்கள் என்னும் சொற்களஞ்சியங்கள். அவற்றுள் சிறந்தது அமரசிம்மன் என்னும் ஜைன மதப் புலவரால் இயற்றப்பட்ட அமரகோசமாகும்.

இந்த அமரகோசம் என்னும் சொற்களஞ்சியம் ஆறு தொகுதிகளாக வெளிக்கொணரத் திட்டமிடப்பட்டு இப்பணி வடமொழிப் புலவர் திரு.ஸ்ரீநிவாசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பெற்றது. ஆறு தொகுதியினுள் இரண்டாம் தொகுதியினை வடமொழிப் புலவர் திரு. என். ஸ்ரீநிவாசன் அவர்கள்தமிழ்க் குறிப்புரையுடன் செய்தளித்துள்ளார். நூலின் பதிப்பாசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

இப்பதிப்பினை நுண்ணாய்வு செய்துகொடுத்துள்ள வடமொழி அறிஞர் திரு. வி. சுவாமிநாத ஆத்ரேயர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்நூல் வாசகர்களிடையே பெற்ற வரவேற்பால் தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலினை நன்முறையில் கணினியில் அச்சிட்ட கணினி பிரிவினருக்கும் மற்றும் ஏனையோருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
25-3-2007

முகவுரை

ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் மிகவும் புகழ்பெற்ற அமரகோசத்தை இயற்றிய அமரசிம்மன் ஆதிசங்கரரின் காலத்தில் வாழ்ந்தவர் என்ற குறிப்பு சங்கர விஜயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதிசங்கரர் பல்வேறு மதங்களின் கொள்கைகளை வாதிட்டு வெற்றிகொண்டவர். அப்போதுதான் ஜைன மதக் கருத்துக்களை முன்னிருத்தி வாதுபுரிந்த அமரசிம்மனுடன் வாதிட்டார் சங்கரர். இவர்கள் இருவரும் வாது புரியும்போது இருவருக்குமிடையே ஒரு திரைச்சீலை கட்டப்பட்டிருந்தது. சங்கரர் மிகவும் நுட்பமாகக் கேள்விகேட்க, தக்க பதிலும் மிக நுட்பமாகவே வெளிவந்தது. இத்தகைய வாதுபுரிந்தவள் அமரசிம்மனின் உபாஸனா தெய்வமான சரஸ்வதிதேவியே. இதனைத் தன் ஞானத்தால் அறிந்த சங்கரர், "தேவீ ! இது முறையோ?" என்று பிரார்த்தனை செய்ய, உடனே திரைச்சீலை அறுந்து வீழ்ந்தது. அச்சமயம் வாதில் தோற்றுப்போன அமரசிம்மன், தான் எழுதிய அனைத்து நூல்களையும் தீயில் போட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தான். சங்கரர் ஓடிச்சென்று அமரசிம்மனின் கையைப் பிடித்துத் தடுத்து, அவன் கையில் இருந்த ஓலைச்சுவடியைப் பறித்தார். அமரசிம்மனிடமிருந்து பறித்த அந்த நூலே அமரகோசம் என்ற புகழ்பெற்ற நூல்.

இத்தகைய புகழ்மிக்க அமரகோசத்தின் 5-12 வர்கம் வரையிலுள்ள எட்டு வர்கங்கள் தமிழாக்கத்துடன் இரண்டாம் தொகுதியாகத் தற்போது வெளிவருகின்றது.

5வது வர்கம் : அறிவால் அறியப்படும் எண்ணங்கள், வண்ணங்கள், ஐம்புலன்களின் செயல்பாடுகள் முதலியவற்றின் சொற்களின் தொகுதி.

6வது வர்கம் : ***சொற்கள் குறித்த வர்கம்.*** இதில் சொல்லின் தேவதை, வேத-சாஸ்திரங்களில் கையாளப்படும் மரபுச் சொற்கள், நூல்களும் அவற்றிற்கான காரணங்களும் கொண்ட தொகுதி.

7வது வர்கம் : ***சப்தாதி வர்கம்.*** ஒலிகளின் வகைகளும் அவற்றுக்குரிய சொற்களின் தொகுதி.

8வது வர்கம் : ***நாட்டிய வர்கம்***. நாட்டியத்தில் கடைபிடிக்கும் பாவங்கள், அபிநயங்கள், வாத்தியங்களின் வகைகள், நவரஸங்கள், நாடகம், அவற்றின் பாத்திரங்கள் போன்ற சொற்கள் செய்திகளின் தொகுதி.

9வது வர்கம்: ***பாதாள வர்கம்.*** பாதாளலோகமும், அவற்றின் பெயர்களும்.

10வது வர்கம் : ***போகிவர்கம்***. பாம்புகளின் தொகுதி. பல்வேறு வகைப்பட்ட பாம்புகளின் பெயர்களும், பாம்பின் தொடர்புடைய பிற சொற்களும்.

11வது வர்கம் : ***நரவர்கம்***. நரகங்களின் பெயர்கள், அங்கு வாழும் பூத-ப்ரேதங்கள் மற்றும் அது தொடர்புடைய சொற்கள்.

12வது வர்கம் : ***வாரி வர்கம்***. இத்தொகுதியில் நீர்நிலைகள் பற்றிய சொற்களும், நீரில் வாழும் உயிரினங்கள் பற்றியும் பல அறிய செய்திகளைக் கூறும் சொற்கள் - ஆகியவை இடம் பெற்றுள்ளன.

நன்றியுரை :

இப்பதிப்பு மத்திய அரசின் நல்கையுடன் "**திட்டப் பணியாக**" மேற்கொண்டு, தற்போது **இரண்டாம் தொகுதி** வெளிவருகிறது. இந்த நூலை நூண்ணாய்வு செய்ததுடன் பல அரிய கருத்துக்களை நல்கி என்னை ஆற்றுப்படுத்தியவர்,

ஸம்ஸ்கிருதம்-தமிழ்மொழி அறிஞர் பிரம்மஸ்ரீ. V. **ஸ்வாமிநாத ஆத்ரேயர்** அவர்கள். அன்னாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டப்பணியை எனக்கு நல்கிய நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான உயர்திரு. **சி. கோசலராமன்,** இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நான் இப்பணியைச் சிறப்பாகச் செய்துமுடிப்பேன்" என்று என்மீது நம்பிக்கையுடன் இப்பணியில் என்னை ஈடுபடுத்திய இந்நூலக நிருவாக அதிகாரி உயர்திரு. **சாமி. சிவஞானம்** அவர்களுக்கும், இந்நூலக வெளியீட்டு மேலாளர் உயர்திரு. **அ. பஞ்சநாதன்** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தொகுதி சிறப்பான முறையில் **ஒளி அச்சுக்கோப்பு – காப்பி பிரிண்டர்** வழியில் அச்சிடப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்த நூலக கணினி பிரிவினருக்கும் மற்றும் இதற்குத் துணைநின்ற ஏனையோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரகோசத்தின் முதல் காண்டம் இத்துடன் நிறைவு பெறுகிறது. அடுத்து 3, 4 ஆகிய இரண்டு தொகுதிகளில் இரண்டாம் காண்டம் தமிழாக்கத்துடன் வெளிவர இருக்கின்றது.

இந்நூலை தமிழ்மொழி – ஸம்ஸ்கிருத மொழி ஆய்வாளர்களும், மொழி ஆர்வலர்களும், மாணவர்களும் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
29-12-2002.

என். ஸ்ரீநிவாசன்.

எமது வெளியீடுகள்

ஆலம்நபி கதைப்பாட்டு	15-00
தணிகைக் கலம்பகம்	25-00
சிவபாரத சரிதம்	16-00
இராசகோபாலமாலை	18-00
திருவேட்டைநல்லூர் ஐயனார் பள்ளு	26-00
குந்தமாலை	40-00
வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி	8-00
நாலுமந்திரி கும்மி	15-00
நாலடியார் உரைவளம் (பாகம்-I)	90-00
நாலடியார் உரைவளம் (பாகம்-II)	75-00
தனிப்பாடல் திரட்டு (பாகம்-I)	30-00
தனிப்பாடல் திரட்டு (பாகம்-II)	40-00
திருக்குறள் பழைய உரை	25-00
கணக்கதிகாரம்	150-00
ஆஸ்தானகோலாகலம்	80-00
பொன்னர் சங்கர் அம்மானை	40-00
திருக்குறள் ஜைன உரை	75-00
வைத்தியநாதஸ்வாமி திருவிளையாடல்	8-00
நாகை கனகசபைநாதன் உலா	50-00
மரியாதைராமன் கதைகள்	22-00
குசலவன் கதை	15-00
ஞானக்குறவஞ்சி	20-00
களாபூர்ணோதயம்	40-00
பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்	14-00
சுந்தரி அம்மானை	12-00
குமரேச சதகம்	65-00
அருகிரி அந்தாதி	12-00
பதிப்புநெறி முறைகள்	10-00
புல்லையந்தாதி	12-00
சோமயாகப் பெருங்காவியம்	19-00

|| श्रीः ||

|| अमरकोशः ||

प्रथमकाण्डे

५. धीवर्गः அறிவுவர்கம்

बुद्धिर्मनीषा धिषणा धीः प्रज्ञा शेमुषी मतिः ।
प्रेक्षोपलब्धिश्चित् संवित् प्रतिपज्ज्ञप्तिचेतनाः ।। 154

1. बुद्धिः (स्त्री), 2. मनीषा (स्त्री), 3 धिषणा (स्त्री), 4. धीः (स्त्री), 5. प्रज्ञा (स्त्री), 6. शेमुषी (स्त्री), 7. मतिः (स्त्री), 8. प्रेक्षा (स्त्री), 9. उपलब्धिः (स्त्री), 10. चित् (स्त्री), 11. संवित् (स्त्री), 12. प्रतिपत् (स्त्री), 13. ज्ञप्तिः (स्त्री), 14. चेतना (स्त्री).

1. **புத்தி:** (பெ-இ.) சிந்திக்கும் - ஆராயும் - ஆற்றல் - புத்தி எண்ணம் கருத்து.
2. **மநீஷா** (பெ-ஆ.) அடைந்த அறிவின் உதவியினால் மேலும் திட்டம் போடுவது கற்பனை புரிந்து.
3. **திஷணா** (பெ-ஆ.) கூரிய அறிவாற்றல்.
4. **தீ:** (பெ-ஈ.) நினைவாற்றல் - எண்ணம் - கருத்து.
5. **ப்ரஜ்ஞா** (பெ-ஆ.) தக்க சமயத்தில் தக்க நினைவு.
6. **சேமுஷீ** (பெ-ஈ) ஆராயும் திறன்.
7. **மதி:** (பெ-இ) ஒரு விஷயத்தைப்பற்றிய திடமான முடிவு. எண்ணம், கருத்து.
8. **ப்ரேக்ஷா** (பெ-ஆ) பல்வேறு விதமாகப் பகுத்து ஆராய்வது
9. **உபலப்தி:** (பெ-இ.) கண்டுபிடிப்பது.
10. **சித்** (பெ-த்) அறிவின் வெளிப்பாடு
11. **ஸம்வித்** (பெ-த்) ஸகல விஷயங்களையும் பற்றிய ஆழ்ந்த அறிவு.

12. **ப்ரதிபத்** (பெ-த்) ஆராய்ச்சியின் முடிவு
13. **ஜ்ஞப்தி:** (பெ-இ) அறிவு
14. **சேதநா** ((பெ-ஆ) உணர்வு.

இத்தனையும் புத்தியின் பல்வேறுவித ஆற்றல்கள், நுணுக்கங்கள்.

धीर्धारणावती मेधा . . . .

1. मेधा (स्त्री)

1. **மேதா** (பெ-ஆ) கற்றது முழுவதும் மறக்காமல் நினைவிலே தேக்கி தக்க சமயத்தில் வெளிப்படுத்துதல்.

. . . . संकल्पः कर्म मानसम् ।

1. संकल्पः (पुं)

1. **ஸங்கல்ப:** (பு-அ) செயலுக்குரிய திட்டம் (மனத்தளவில்)

(अवधानं समाधानं प्रणिधानं तथैव च) ।

1. अवधानं (न), 2. समाधानं (न), 3. प्रणिधानं (न)

1. **அவதானம்** (ந-அ) கவனம்
2. **ஸமாதானம்** (ந-அ) ஆராய்ந்து கிடைத்த முடிவில் திருப்தி.
3. **ப்ரணிதாநம்** (ந-அ) ஒரு விஷத்தைப் பற்றி சிந்திப்பது.

चित्ताभोगो मनस्कारः . . . .

1. चित्ताभोगः (पुं), (2) मनस्कारः (पुं)

1. **சித்தாபோக:** (பு-அ) மனத்தின் அனுபவ விரிவு
2. **மநஸ்கார:** (பு-அ) மனமொப்பி ஒருவிஷயத்தில் ஈடுபடுதல்.

. . . . चर्चा संख्या विचारणा ।। 155

1. चर्चा (स्त्री), 2. संख्या (स्त्री), 3. विचारणा (स्त्री)

1. **சர்ச்சா** (பெ-ஆ) ஒரு விஷயத்தைப் பிறருடன் பேசி ஆராய்தல்.
2. **ஸங்க்யா** (பெ-ஆ) காரண காரியங்களைப் படிப்படியாக ஆராய்தல்.
3. **விசாரணா** (பெ-ஆ) தனிமையில் ஆராய்தல்.

(विमर्शो भावना चैव वासना च निगद्यते)।। 156

1. विमर्शः (पुं), 2. भावना (स्त्री), 3. वासना (स्त्री)

1. **விமர்ச:** (பு-அ) மறந்த விஷயத்தை நினைவுக்குக் கொண்டு வருதல்
2. **பாவநா** (பெ-ஆ) 'எப்படி இருந்தால் ஒரு விஷயம் நன்றாக இருக்கும்' என்று மனத்தில் எண்ணப்படம் வரைதல்.
3. **வாஸநா** (பெ-ஆ) ஒரு செயல் நினைவில் ஆழ்ந்திருந்து அது இயல்பாகவே ஆகி, தானாகவே புலன்கள் அதில் ஈடுபடுவது.

अध्याहारस्तर्क ऊहो . . . .

1. अध्याहारः (पुं), 2. तर्कः (पुं), 3. ऊहः (पुं)

1. **அத்யாஹார:** (பு-அ) ஒரு விஷயம் தொடர்பான முன் நிகழ்வுகளை நினைவுக்குக் கொண்டுவருதல்.
2. **தர்க:** (பு-அ) இப்படியா, அப்படியா, இதுவா, அதுவா என்று ஒரு விஷயத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களை ஆராய்தல்.
3. **ஊஹ:** (பு-அ) புரியாத நிலையில் இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று ஊகித்தல்.

. . . . विचिकित्सा तु संशयः ।
सन्देहद्वापरौ . . . .

1. विचिकित्सा (स्त्री). 2. संशयः (पुं), 3. सन्देहः (पुं), 4. द्वापरः (पुं).

1. **விசிகித்ஸா** (பெ-ஆ) ஒரு விஷயத்தை நன்கு அறியாத நிலையில், மேற்படி விஷய சிந்தனையில் தோன்றுகின்ற ஐயம்.
2. **ஸம்ஸய:** (பு-அ) ஐயம்.
3. **ஸந்தேஹ:** (பு-அ) ஐயம்
4. **த்வாபர:** (பு-அ) ஒன்றை, எதிரெதிராக இரண்டு விதமாகவும் நினைப்பது.

. . . . चाथ समौ निर्णयनिश्चयौ ।। 157

1. निर्णयः (पुं), 2. निश्चयः (पुं)

1. **நிர்ணய:** (பு-அ) உறுதிப்பாடு
2. **நிச்சய:** (பு-அ) உறுதிப்பாடு

मिथ्यादृष्टिर्नास्तिकता . . . . .

1. मिथ्यादृष्टिः (स्त्री), 2. नास्तिकता (स्त्री)

1. **மித்யாதிருஷ்டி:** (பெ-இ) இல்லாத தோற்றத்தை இருப்பதாக நினைத்து செயல்படுவது.
2. **நாஸ்திகதா** (பெ-ஆ) உண்மையாக இருப்பதை இல்லை என்று கருதுவது.

. . . . व्यापादो द्रोहचिन्तनम् ।

1. व्यापादः (पुं), 2. द्रोहचिन्तनम् (न)

1. **வ்யாபாத:** (பு-அ) அகாரணமாகப் பகை கொள்ளுதல்
2. **த்ரோஹசிந்தநம்**(ந-அ) அகாரணமாகப் பகை கொள்ளுதல்.

समौ सिद्धान्तराद्धान्तौ . . . .

1. सिद्धान्तः (पुं), 2. राद्धान्तः (पुं)

1. **ஸித்தாந்த:** (பு-அ) ஒரு விஷயம் பற்றிப் பலவிதமான கருத்துக்களை ஆராய்ந்து, தவறான கருத்துக்களைக் காரணம் சொல்லி அப்படி அல்ல என்று நிரூபித்த பிறகு ஏற்படுகின்ற முடிவு.
2. **ராத்தாந்த:** (பு-அ) " " " " "

. . . . भ्रान्तिर्मिथ्यामतिर्भ्रमः ।। 158

1 भ्रान्तिः (स्त्री), 2. मिथ्यामतिः (स्त्री), 3. भ्रमः (पुं)

1. **ப்ராந்தி:** (பெ-இ) மதிக்கலக்கம்
2. **மித்யாமதி:** (பெ-இ) தவறான எண்ணம்
3. **ப்ரம:** (பு-அ) தவறான எண்ணம்

संविदागूः प्रतिज्ञानं नियमाश्रवसंश्रवाः ।

1. संवित् (स्त्री), 2. आगूः (स्त्री), 3. प्रतिज्ञानं (न), 4. नियमः (पुं), 5. आश्रवः (पुं), 6. संश्रवः (पुं)

आगूः आग्वौ आग्वः - ऊकारान्तः

आग् आगुरौ आगुरः - रेपान्तः

1. **ஸம்வித்** (பெ-த்) ஞானத்தில் தோய்ந்த உணர்வு.
2. **ஆகூ:** (பெ-ஊ) ஞானத்தில் தோய்ந்த உணர்வு. (ஊகாரத்தில் முடியும் சொல் என்றும், ரகரத்தில் முடியும் சொல் என்றும் இரண்டு உண்டு.)
3. **ப்ரதிக்ஞானம்** (ந-ஊ) இப்படிச் செய்வேன் என்று ஆணை யிட்டுக் கூறுவது.
4. **நியம:** (பு-அ) ஆணையில் உறுதியாக நிற்பது.
5. **ஆச்ரவ:** (பு-அ) ஆணையில் உறுதியாக நிற்பது.
6. **ஸம்ச்ரவ:** (பு-அ) ஆணையில் உறுதியாக நிற்பது.

अङ्गीकाराभ्युपगमप्रतिश्रव समाधयः ।। 159

1. अङ्गीकारः (पुं), 2. अभ्युपगमः (पुं), 3. प्रतिश्रवः (पुं)
4. समाधिः (पुं)

1. **அங்கீகார:** (பு-அ) பிறர்சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்வது.
2. **அப்யுபகம:** (பு-அ) " " "
3. **ப்ரதிச்ரவ:** (பு-அ) " " "
4. **ஸமாதி:** (பு-அ) " " "

मोक्षे धीर्ज्ञानं . . . .

1. ज्ञानम् (न)

1. **க்ஞாநம்** (ந-அ) பரம்பொருளைப்பற்றிய (அனுபவம்) ஞாநம்.

. . . . . . अन्यत्र विज्ञानं शिल्पशास्त्रयोः ।

1. विज्ञानं (न)

1. **விக்ஞாநம்** (ந-அ) பரம்பொருள் தவிர மற்ற உலகியல் பற்றிய நடைமுறை அறநூல்களைச் சார்ந்த அறிவு.

मुक्तिः कैवल्यनिर्वाणश्रेयोनिःश्रेयसामृतम् ।। 160
मोक्षोऽपवर्गः . . . .

1. मुक्तिः (स्त्री), 2. कैवल्यं (न), 3. निर्वाणम् (न),
4. श्रेयस् (न), 5. निःश्रेयसं (न), 6. अमृतम् (न),
7. मोक्षः (पुं), 8. अपवर्गः (पुं).

1. **முக்தி:** (பெ-இ) (உலகியல் ஈடுபாட்டிலிருந்து அநுபவ-பூர்வமாக) விடுபடுவது.
2. **கைவல்யம்** (ந-அ) (உலகியல் பந்தம் அகன்று) தனியாக இயங்குவது.
3. **நிர்வாணம்** (ந-அ) இன்ப-துன்ப உணர்வற்ற சுத்த அறிவு நிலை
4. **ச்ரேய:** (ந-ஸ்) வேண்டத் தக்கதில் சிறந்தது.

5. **நிச்ரேயஸம்** (ந-அ) அதைக் காட்டிலும் வேறு ஒன்று சிறந்தது என்று கருதாமை.
6. **அம்ருதம்** (ந-அ) உடல்தான் 'தான்' என்ற கருத்து ஒருங்கே அழிந்து உடலின் மரணத்தைத் தன் முடிவாகக் கருதாமை.
7. **மோக்ஷ:** (பு-அ) உலகியலிலிருந்து விடுபட்ட நிலை.
8. **அபவர்க:** (பு-அ) உலகியலிலிருந்து விடுபட்ட நிலை.

. . . . अथाज्ञानमविद्याहंमतिः स्त्रियाम् ।

1. अज्ञानं (न), 2. अविद्या (स्त्री), 3. अहंमतिः (स्त्री)

1. **அஜ்ஞாநம்** (ந-அ) ஆன்மீக விஷயத்தில் அஜ்ஞாநம் என்பது பரம்பொருள்பற்றிய அறிவற்ற நிலை.
2. **அவித்யா** (பெ-ஆ) " " " " "
3. **அஹம்மதி:** (பெ-இ) உடலே ஆத்மா என்று நினைத்து அதையே 'நான்' என்று கொள்வது.

रूपं शब्दो गन्धरसस्पर्शाश्च विषया अमी ।। 161

1. रूपं (न), 2. शब्दः (पुं), 3. गन्धः (पुं) 4. रसः (पुं),
5. स्पर्शः (पुं)

1. **ரூபம்** (ந-அ) உருவம் (கண்களால் காணப்படுவது)
2. **சப்த:** (பு-அ) ஒலி (காதுகளால் கேட்கப்படுவது)
3. **கந்த:** (பு-அ) மணம் (மூக்கினால் நுகரப்படுவது)
4. **ரஸ:** (பு-அ) ருசி (நாவினால் உணரப்படுவது)
5. **ஸ்பர்ச:** (பு-அ) உணர்வு (உடலின் தீண்டுதலால் உணரப்படுவது)

இவை ஐந்தும் அறிவுப் புலன்களுக்கு அகப்படுகின்ற அனுபவங்கள்.

गोचरा इन्द्रियार्थाश्च . . . .

1. गोचरः (पुं)

1. **கோசர:** (பு-அ) புலன்களால் அறியப்படுவது.

. . . . हृषीकं विषयीन्द्रियम् ।

1. हृषीकं (न)

1. **ஹ்ருஷீகம்** (ந-அ) விஷயங்களில் ஈடுபட்டு, மேலே சொன்ன ஐவகை அனுபவங்களைத் தருகின்ற புலன்.

कर्मेन्द्रियं तु पाय्वादि . . . .

1. कर्मेन्द्रियं (न)

1. **கர்மேந்த்ரியம்** (ந-அ) செயல்புரிகின்ற புலன்.

1. पायुः பாயு: - (பு-உ) உடல் மலங்களை நீக்குவது.
2. वाक् வாக் - (பு-ச்) நாக்கின் பேசுகின்ற ஆற்றல்
3. पाणि பாணி - (பு-இ) செயலில் ஈடுபடுகின்ற கைகள்
4. पादः பாத: - (பு-அ) நடப்பதற்கு உதவுகின்ற கால்கள்
5. उपस्थं உபஸ்தம் (ந-அ) இனவிருத்திக்கு உபயோகப்படுகின்ற புலன்.

. . . . मनोनेत्रादि धीन्द्रियम् ।। 162

1. धीन्द्रियम् (न)

1. **தீந்த்ரியம்** (ந-அ) மனது கண்கள் முதலியன அறிவுப் புலன்கள்

तुवरस्तु कषायोऽस्त्री . . . . . .

1. तुवरः (पुं), 2. कषायः (पुं)

1. **துவர:** (பு-அ) கலப்புச்சுவை
2. **கஷாய:** (பு-அ) ,, ,,

அந்தந்தச் சுவையுடையவற்றையும் அந்தந்தச் சொல் குறிக்கிறது. அடைமொழியாக. இந்தச் சொற்கள் மூன்று லிங்கங்களிலும் வரும்.

. . . . मधुरो लवणः कटुः ।

तिक्तोऽम्लश्च रसाः पुंसि तद्वत्सु षडमी त्रिषु ।। 163

1. मधुरः (पुं), 2. लवणः (पुं), 3. कटुः (पुं), 4. तिक्तः, 5. अम्लः (पुं)

1. மதுர: (பு-அ) இனிப்பு
2. லவண: (பு-அ) உப்பு
3. கடு: (பு-அ) உரைப்பு
4. திக்த: (பு-அ) கசப்பு
5. அம்ல: (பு-அ) புளிப்பு

அந்தந்த சுவையுடைய பொருள்களையும் அந்தந்த லிங்கங்களில் குறிக்கும்.

विमर्दोत्थे परिमलो गन्धे जनमनोहरे ।

आमोदः सोऽति निर्हारी . . . .

1. परिमलः (पुं), 2. आमोदः (पुं)

1. பரிமள: (பு-அ) அறைப்பதாலோ, நசுக்குவதாலோ வெளிப்படுகின்ற மணம்.
2. ஆமோத: (பு-அ) வெகுதூரம் பரவுகின்ற மணம்

. . . . . वाच्यलिङ्गत्वमा गुणात् ।। 164

அடைமொழிகளான இச்சொற்களுடன் சேர்ந்து எந்தச் சொல் வருகின்றனவோ அந்தச் சொற்களின் லிங்கமாகும்.

समाकर्षी तु निर्हारी . . . .

1. समाकर्षी (त्रि), 2. निर्हारी (त्रि)

1. ஸமாகர்ஷீ (பு, பெ, ந-ஈ) தூரத்திலிருந்தாலும் மூக்கின் நுகருகின்ற தன்மையை இழுப்பது.
2. நிர்ஹாரீ (பு, பெ, ந-ஈ) " " " "

. . . . . . सुरभिर्घ्राणतर्पणः ।

इष्टगन्धः सुगन्धिः स्यात् . . . .

1. सुरभिः (त्रि), 2. घ्राणतर्पणः (त्रि) 3. इष्टगन्धः (त्रि) 4. सुगन्धिः (त्रि)

1. **ஸுரபி:** (பு, பெ, ந-இ) மூக்கைத் திருப்திபடுத்துகின்ற மணம்
2. **க்ராணதர்ப்பண:** (பு, பெ, ந-அ) " " "
3. **இஷ்டகந்த:** (பு, பெ, ந-அ) விரும்பத் தக்க மணம்
4. **ஸுகந்தி:** (பு, பெ, ந-இ) " "

. . . . आमोदी मुखवासनः ।। 165

1. आमोदि (त्रि)

1. **ஆமோதி** (பு, பெ, ந-ந்) (ஏலக்காய், ஜாதிபத்திரி போன்ற) வாய்க்கு மணம் சேர்க்கும் பொருள்.

पूतिगन्धिस्तु दुर्गन्धः . . . .

1. पूतिगन्धिः (त्रि)

1. பூதிகந்தி: (பு, பெ, ந-இ) துர்நாற்றம்

. . . . विस्रं स्यादामगन्धि यत् ।

1. विस्रं (त्रि)

1. **விஸ்ரம்** (பு, பெ, ந-அ) பக்குவப்படாத அல்லது பழைய உணவுப் பொருளின் துர்நாற்றம்.

शुक्लशुभ्रशुचिश्वेतविशदश्येतपाण्डराः ।। 166

अवदातः सितो गौरो वलक्षो धवलोऽर्जुनः ।

1. शुक्लः (पुं), 2. शुभ्रः (पुं), 3. शुचिः (पुं), 4. श्वेतः (पुं),

5. विशदः (पुं) 6 श्येतः (पुं) 7 पाण्डरः (पुं) 8. अवदातः (पुं),
9. सितः (पुं) 10. गौरः (पुं) 11. वलक्षः (पुं) 12. धवलः (पुं),
13. अर्जुनः (पुं).

1. சுக்ல: (பு-அ) இந்த பதிமூன்று சொற்களும்
2. சுப்ர: (பு-அ) வெள்ளை நிறம் என்ற
3. சுசி: (பு-இ) பொருளில் அடைமொழியாக
4. ச்வேத: (பு-அ) வரும்போது அந்த சொல்லுக்குரிய
5. விசத: (பு-அ) லிங்கத்தைப்பெறும்.
6. ச்யேத: (பு-அ)
7. பாண்டர: (பு-அ)
8. அவதாத: (பு-அ)
9. ஸித: (பு-அ)
10. கௌர: (பு-அ)
11. வலக்ஷ: (பு-அ)
12. தவள: (பு-அ)
13. அர்ஜுன: (பு-அ)

हरिणः पाण्डुरः पाण्डुः . . . . .

1. हरिणः (पुं), 2. पाण्डुरः (पुं), 3. पाण्डुः (पुं)

1. ஹரிண: (பு-அ) கொஞ்சம் மஞ்சள் நிறம் கலந்த
2. பாண்டுர: (பு-அ) வெள்ளை நிறத்துப் பொருள்.
3. பாண்டு: (பு-அ)

. . . . . ईषत्पाण्डुस्तु धूसरः ।। 167

1. धूसरः (पुं)

1. தூஸர: (பு-அ) மங்கலான வெள்ளை நிறத்துப்பொருள்

कृष्णे नीलासितश्यामकालश्यामलमेचकाः ।

1. कृष्णः (पुं), 2. नीलः (पुं), 3. श्यामः (पुं), 4. कालः (पुं), 5. श्यामलः (पुं), 6. मेचकः (पुं).

1. **க்ருஷ்ண:** (பு-அ) **நல்ல கரிய நிறம்** - முகில் வண்ணம்
2. **நீல:** (பு-அ) " " "
3. **ச்யாம:** (பு-அ) வெளிரிய கரிய நிறம்.
4. **கால:** (பு-அ) நல்ல கரிய நிறம் - முகில் வண்ணம்
5. **ச்யாமல:** (பு-அ) " " "
6. **மேசக:** (பு-அ) " " "

पीतो गौरो हरिद्राभः . . . .

1. पीतः (पुं), 2. गौरः (पुं), 3. हरिद्राभः (पुं)

1. **பீத:** (பு-அ) **மஞ்சளின் நிறம்**
2. **கௌர:** (பு-அ) "
3. **ஹரித்ராப:** (பு-அ) "

. . . . पालाशो हरितो हरित् ।। 168

1. पालाशः (पुं), 2. हरितः (पुं), 3. हरित् (पुं)

1. **பலாச:** (பு-அ) புரச இலையினுடையது போன்ற நிறம்.
2. **ஹரித:** (பு-அ) பசுமை.
3. **ஹரித்** (பு-த்) பசுமை.

लोहितो रोहितो रक्तः शोणः कोकनदच्छविः ।

1 लोहितः (पुं), 2. रोहितः (पुं), 3. रक्तः (पुं), 4 शोणः (पुं) 5. कोकनदच्छविः (पुं),

1. **லோஹித:** (பு-அ) சிவப்பு
2. **ரோஹித:** (பு-அ) சிவப்பு

3. ரக்த: (பு-அ) சிவப்பு
4. சோண: (பு-அ) சிவப்பு
5. கோகநதச்சவி: (பு-அ) சிவப்பு ஆம்பல் நிறம்

अव्यक्तरागस्त्वरुणः . . . .

1 अरुणः (पुं)

1. அருண: (பு-அ) சிவப்பு நன்றாக விரிவாகாத நிறம்.

. . . . श्वेतरक्तस्तु पाटलः ।। 169

1. पाटलः (पुं)

1. பாடல: (பு-அ) வெளிர் சிவப்பு.

श्यावः स्यात् कपिशः . . . .

1. श्यावः (पुं), 2. कपिशः (पुं).

1. ச்யாவ: (பு-அ) பழுப்பு நிறம்
2. கபிச: (பு-அ) பழுப்பு நிறம்

. . . . धूम्रधूमलौ कृष्णलोहिते ।

1. धूम्रः (पुं), 2. धूमलः (पुं), 3. कृष्णलोहितः ।

1. தூம்ர: (பு-அ) சிவப்பும்-சாம்பலும் சேர்ந்த (புறாவின் கழுத்துப் போன்ற) நிறம்.
2. தூமல: (பு-அ) "
3. க்ருஷ்ணலோஹித: (பு-அ) "

कडारः कपिलः पिङ्गपिशङ्गौ कद्रुपिङ्गलौ ।। 170

1. कडारः (पुं), 2. कपिलः (पुं), 3. पिङ्गः (पुं),
4. पिशङ्गः (पुं), 5. कद्रुः (पुं), 6. पिङ्गलः (पुं)

1. கடார: (பு-அ) கருப்பு மேலிட்ட மஞ்சள் நிறம்
2. கபில: (பு-அ) "
3. பிங்க: (பு-அ) "
4. பிசங்க: (பு-அ) "
5. கத்ரு: (பு-உ) "
6. பிங்கல: (பு-அ) "

चित्रं किर्मीरकल्माषशबलैताश्च कर्बुरे ।

1. चित्रः (पुं), 2. किर्मीरः (पुं), 3. कल्माषः (पुं),
4. शबलः (पुं), 5. एतः (पुं), 6. कर्बुरः (पुं)

1. சித்ர: (பு-அ) பல வண்ணக் கலவை
2. கிர்மீர: (பு-அ) "
3. கல்மாஷ: (பு-அ) "
4. சபல: (பு-அ) "
5. ஏத: (பு-அ) "
6. கர்புர: (பு-அ) "

गुणे शुक्लादयः पुंसि गुणिलिङ्गास्तु तद्वति ।। 171

நிறத்திற்குரிய மேலே சொன்ன சொற்கள் எல்லாம் நிறத்தை மட்டும் குறிப்பிடும்போது புல்லிங்கம். அந்தந்த நிறமுடைய பொருளை (அடைமொழியாகக்) குறிப்பிடும் போது அந்தந்தச் சொற்களின் லிங்கத்தில் வரும்.

।। इति धीवर्गः ।।

அறிவு வர்க்கம் முற்றிற்று.

६. वाग्वर्गः சொல்வர்கம்

ब्राह्मी तु भारती भाषा गीर्वाग्वाणी सरस्वती ।

1. ब्राह्मी (स्त्री), 2. भारती (स्त्री), 3. भाषा (स्त्री), 4. गीः (स्त्री), 5. वाक् (स्त्री), 6. वाणी (स्त्री), 7. सरस्वती (स्त्री).

1. **ப்ராம்ஹீ** (பெ-ஈ) பிர்மதேவனின் மனைவி ஸரஸ்வதீ. சொற்களின் தேவதை.
2. **பாரதீ** (பெ-ஈ) " " " " "
3. **பாஷா** (பெ-ஆ) மொழி.
4. **கீ:** (பெ-ர்) "
5. **வாக்** (பெ-ச்) "
6. **வாணீ** (பெ-ஈ) ஸரஸ்வதீ - மொழி
7. **ஸரஸ்வதீ** (பெ-ஈ) " "

व्याहार उक्तिर्लपितं भाषितं वचनं वचः ।। 172

1. व्याहारः (पुं), 2. उक्तिः (स्त्री), 3. लपितं (न), 4. भाषितं (न), 5. वचनं (न), 6. वचः (न).

1. **வ்யாஹார:** (பு-அ) பேச்சு
2. **உக்தி:** (பெ-இ) "
3. **லபிதம்** (ந-அ) "
4. **பாஷிதம்** (ந-அ) "
5. **வசநம்** (ந-அ) "
6. **வச:** (ந-ஸ்) "

अपभ्रंशोऽपशब्दः . . . .

1. अपभ्रंशः (पुं), 2. अपशब्दः (पुं)

1. **அபப்ரம்ச:** (பு-அ) கொச்சை மொழி
2. **அபசப்த:** (பு-அ) " "

. . . . स्याच्छास्त्रे शब्दस्तु वाचकः ।

1. शब्दः (पुं), 2. वाचकः (पुं)

1. **சப்த:** (பு-அ) சாஸ்த்திர நூல்களில் உபயோகிக்கப்படும் 'சப்த:' என்ற சொல்லின் லக்ஷணை முதலிய பொருள் வேறுபாடுகளில் கலைச்சொல்லாக, குறிப்பிட்ட பொருளைக் கூறுகின்ற சொல்.
2. **வாசக:** (பு-அ) " " " " "

तिङ्सुबन्तचयो वाक्यं क्रिया वा कारकान्विता ।। 173

1. वाक्यं (न)

1. **வாக்யம்** (ந-அ) சாஸ்திர பரிபாஷைப்படி பொருளைக்கூறும் சொற்களும், வினைச்சொற்களும் சேர்த்து அல்லது ஒரு செய்கையைக் கூறுகின்ற சொற்கோவை.

श्रुतिः स्त्री वेद आम्नायस्त्रयी . . . . .

1. श्रुतिः (स्ती), 2. वेदः (पुं), 3. आम्नायः (पुं), 4. त्रयी (स्त्री)

1. **ச்ருதி:** (பு-இ) வேதம்
2. **வேத:** (பு-அ) வேதம்
3. **ஆம்நாய:** (பு-அ) வேதம்
4. **த்ரயீ** (பெ-ஈ) வேதம்

. . . . धर्मस्तु तद्विधिः ।

1. धर्मः (पुं)

1. **தர்ம:** (பு-அ) வேதத்தில் கூறப்பட்ட அறநெறி என்பது சாஸ்திர மரபு. (பொதுவாக) அறம்.

स्त्रियामृक् सामयजुषी इति वेदास्त्रयस्त्रयी ।। 174

1. ऋच् (स्त्री), 2. साम, (न), 3. यजुष् (न), 4. त्रयी (स्त्री)

1. ர்ருக் (பெ-ச்) ருக் வேதம்.
2. ஸாம (ந-ந) ஸாமவேதம்
3. யஜுஸ் (ந-ஷ்) யஜுர் வேதம்
4. த்ரயீ (பெ-ஈ) மூன்றையும் சேர்த்துக்கூறுவது.

शीक्षेत्यादि श्रुतेरङ्गं . . . .

1. शीक्षा (स्त्री), 2. श्रुतेरङ्गं (न)

*1. சீக்ஷா (பெ-ஆ) சீக்ஷா முதலியவை.
2. ச்ருத்யங்கம் (ந-அ) வேதாங்கங்கள் ஆறு.

*1. சீக்ஷா (பெ-ஆ) ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிப்ப தற்குரிய இலக்கண நூல்.

2. கல்ப: (பு-அ) வேதங்களில் கூறப்படுகின்ற யாகம் முதலிய கர்மாக்களைக் கூறுகின்ற சாஸ்திரம்.

3. வ்யாகரணம் (ந-அ) வேதங்களில் காணப்படும் சொற்களின் இலக்கணம்.

4. நிருக்தம் (ந-அ) வேதச் சொற்களின் நிகண்டு.

5. ஜ்யோதிஷம் (ந-அ) வேதங்களில் கூறப்படுகின்ற கர்மாக்களைச் செய்கின்ற நேரம், காலம் பற்றிய நூல்.

6. சந்தஸ் (ந-ஸ்) வேதங்களின் யாப்பிலக்கணம்.

. . . . ओङ्कार प्रणवौ समौ ।

1. ओङ्कारः (पुं), 2. प्रणवः (पुं)

1. ஓங்கார: (பு-அ) 'ஓம்' என்ற சொல்.
2. ப்ரணவ: (பு-அ)

इतिहासः पुरावृत्तं . . . .

1. इतिहासः (पुं), 2. पुरावृत्तं (न)

1. இதிஹாஸ: (பு-அ) முன்பு அப்படியிருந்தது. நடந்தது என்ற 'உண்மை சரிதம்' கூறும் நூல்.
2. புராவ்ருத்தம் (ந-அ) ,, ,, ,, ,, ,,

1. उदात्ताद्यास्त्रयः (पुं), 2. स्वरः (पुं)

1. **உதாத்தாத்யாஸ்த்ரய:** (பு. பெ. ந-அ) உதாத்தம், அநுதாத்தம்,
2. **ஸ்வர:** (பு-அ) ஸ்வரிதம் என்ற மூன்று வேதஸ்வரங்கள்.

आन्वीक्षिकी दण्डनीतिस्तर्कविद्यार्थशास्त्रयोः ।

1. आन्वीक्षिकी (स्त्री), 2. दण्डनीतिः (स्त्री).

1. **ஆன்வீக்ஷிகீ** (பெ-ஈ) சாஸ்திரங்களைக் கற்ற பிறகு அவற்றை தர்க்கரீதியாக ஆராய்வது.
2. **தண்டநீதி:** (பெ-இ) பொருளாதாரம் - நியாயபரிபாலநம் முதலிய அரசியல் நெறி.

आख्यायिकोपलब्धार्था . . . .

1. आख्यायिका (स्त्री)

1. **ஆக்யாயிகா** (பெ-ஆ) ஒரு கருத்தை எடுத்து நிரூபிப்பதற்காகக் கற்பனையாகக் கூறப்படுகின்ற கதை.

. . . . पुराणं पञ्चलक्षणम् ।। 176

1. पुराणम् (न)

1. **புராணம்** (ந-அ) இது ஐந்து இலக்கணங்கள் கொண்டது.
   1. முதற்படைப்பு (ச்ருஷ்டி), 2. அடுத்த படைப்புகள் 3. சிறந்த புருஷர்களின் வம்ச வரலாறு, 4. மந்வந்தரம் என்ற காலகட்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள், 5. பூமி முதலிய கோள்கள் பற்றிய விரிவுரை. இவ்வகை விபரங்களைக் கொண்டதற்கு **புராணம்** என்று பெயர்.

प्रबन्धकल्पणा कथा . . . .

1. प्रबन्धकल्पणा (स्त्री), 2. कथा (स्त्री)

1. **ப்ரபந்தகல்பணா** (பெ-ஆ) கவிஞர்களின் கற்பனைக் கதை.

. . . . . . प्रवल्हिका प्रहेलिका ।

1. प्रवल्हिका (स्त्री), 2. प्रहेलिका (स्त्री)

1. ப்ரவல்ஹிகா (பெ-ஆ) புதிர்.

2. ப்ரஹேலிகா (பெ-ஆ) புதிர்.

स्मृतिस्तु धर्मसंहिता . . . .

1. स्मृतिः (स्त्री), 2. धर्मसंहिता (स्त्री)

1. ஸ்ம்ருதி: (பெ-இ) தர்மத்தை எடுத்துக்கூறும் நூல்

2. தர்மஸம்ஹிதா (பெ-ஆ) " " "

. . . . समाहृतिस्तु संग्रहः ।। 177

1. समाहृतिः (स्त्री) 2. संग्रहः (पुं)

1. ஸமாஹ்ருதி: (பெ-இ) பல இலக்கியங்களிலிருந்து எடுத்தோ

2. ஸங்க்ரஹ: (பு-அ) அல்லது ஒரு பெரிய நூலைச் சுருக்கியோ கூறும் நூல்.

समस्या तु समासार्था . . . .

1. समस्या (स्त्री)

1. ஸமஸ்யா (பெ-ஆ) ஒரு கருத்தை முழுதும் கூறாமல் விடப்பட்டதை ஆராய்ந்து அதை முழுமையாக்குதல்.

. . . . किं वदन्ती जनश्रुतिः ।

1 किं वदन्ती (स्त्री), 2. जनश्रुतिः (स्त्री)

1. கிம் வதந்தீ (பெ-ஈ) செவிவழிக்கூற்று

2. ஜநச்ருதி (பெ-இ) "

वार्ता प्रवृत्तिर्वृत्तान्त उदान्तः स्यात् . . . .

1. वार्ता (स्त्री), 2. प्रवृत्तिः (स्त्री) 3. वृत्तान्तः (पुं),
4. उदान्तः (पुं)

1. வார்த்தா (பெ-ஆ) செய்தி
2. ப்ரவ்ருத்தி: (பெ-இ) செய்தி - நடைமுறை
3. வ்ருத்தாந்த: (பு-அ) நடந்தபடி கூறுவது
4. உதாந்த: (பு-அ) நடந்தபடி கூறுவது.

. . . . अथाह्वयः ।। 178

आख्यानं अभिधानं च नामधेयं च नाम च ।

1. आह्वयः (पुं), 2. आख्यानं (न), 3. अभिधानं (न),
4. नामधेयं (न), 5. नाम (न).

1. ஆஹ்வய: (பு-அ) ஒருவரின் பெயர்.
2. ஆக்யாநம் (ந-அ) பெயர்
3. அபிதாநம் (ந-அ) பெயர்
4. நாமதேயம் (ந-அ) பெயர்
5. நாம (ந-அ) பெயர்.

हूतिराकारणाह्वानं . . . .

1. हूतिः (स्त्री), 2. आकारणं (न), 3. आह्वानम् (न).

1. ஹூதி: (பெ-இ) கூப்பிடுதல்
2. ஆகாரணம் (ந-அ) கூப்பிடுதல்
3. ஆஹ்வாநம் (ந-அ) கூப்பிடுதல்

. . . . संहूतिर्बहुभिः कृता ।। 179

1. संहूतिः (स्त्री)

1. ஸம்ஹூதி: (பெ-இ) பலர் சேர்ந்து கூப்பிடுதல்

विवादो व्यवहारः स्यात्

1. विवादः (पुं), 2. व्यवहारः (पुं)

1. விவாத: (பு-அ) கருத்து வேற்றுமைகளை வற்புறுத்தல்.

2. வ்யவஹார: (பு-அ) ,, ,, ,,

. . . . उपन्यासस्तु वाङ्मुखम् ।

1. उपन्यासः (पुं), 2. वाङ्मुखम् (न)

1. உபந்யாஸ: (பு-அ) விரிவுரைப் பேச்சு

2. வாங்முகம் (ந-அ) விரிவுரைப் பேச்சு

उपोद्घात उदाहारः . . . .

1. उपोद्घातः (पुं), 2. उदाहारः (पुं).

1. உபோத்காத: (பு-அ) முகவுரை

2. உதாஹார: (பு-அ) சான்று கூறுதல்

. . . . शपनं शपथः पुमान् ।। 180

1. शपनं (न), 2. शपथः (पुं)

1. சபநம் (ந-அ) ஒருவர்மேல் ஆணையிட்டுக் கூறுதல்

2. சபத: (பு-அ) ,, ,, ,,

प्रश्नोऽनुयोगः पृच्छा च . . . . . .

1. प्रश्नः (पुं), 2. अनुयोगः (पुं), 3. पृच्छा (स्त्री)

1. ப்ரச்ந: (பு-அ) கேள்வி

2. அநுயோக: (பு-அ) கேள்வி

3. ப்ருச்சா (பெ-ஆ) கேள்வி

. . . . प्रतिवाक्योत्तरे समे ।

1. प्रतिवाक्यं (न), 2. उत्तरं (न)

1. ப்ரதிவாக்யம் (ந-அ) (கேள்விக்கு) பதில்
2. உத்தரம் (ந-அ) (கேள்விக்கு) பதில்

मिथ्याऽभियोगोऽभ्याख्यानं अथ मिथ्याभिशंसनम् ।। 181

अभिशापः . . . .

1. मिथ्याऽभियोगः (पुं), 2. अभ्याख्यानं (न),
3. मिथ्याभिशंसनं (न), 4 अभिशापः (पुं)

1. மித்யாऽபியோக: (பு-அ) பொய்யான குற்றச்சாட்டு
2. அப்யாக்யாநம் (ந-அ) " "
3. மித்யாபிசம்ஸநம் (ந-அ) பொய்யாகப் பழிகூறுதல்
4. அபிசாப: (பு-அ) " "

. . . . . प्रणादस्तु शब्दः स्यादनुरागजः ।

1. प्रणादः (पुं)

1. ப்ரணாத: (பு-அ) அன்பைக் காட்டும் ஆர்வச்சொல்

यशः कीर्तिः समाज्ञा च . . . . .

1. यशः (पुं), 2. कीर्तिः (पुं), 3. समाज्ञा (स्त्री)

1. யச: (பு-அ) புகழ்
2. கீர்த்தி: (பு-இ) புகழ்
3. ஸமாஜ்ஞா (பெ-ஆ) புகழ்

. . . . स्तवः स्तोत्रं स्तुतिर्नुतिः ।। 182

1. स्तवः (पुं), 2. स्तोत्रं (न), 3. स्तुतिः (स्त्री),
4. नुतिः (स्त्री)

1. ஸ்தவ: (பு-அ) துதித்தல்
2. ஸ்தோத்ரம் (ந-அ) துதித்தல்

3. ஸ்துதி: (பெ-இ) துதித்தல்
4. நுதி: (பெ-இ) துதித்தல்

आम्रेडितं द्विस्त्रिरुक्तं . . . .

1. आम्रेडितं (न), 2. द्विस्त्रिरुक्तं (न)

1. ஆம்ரேடிதம் (ந-அ) இரண்டு மூன்று தடவை
2. த்விஸ்த்ரிருக்தம் (ந-அ) திரும்பத் திரும்பக்கூறுதல்

उच्चैर्घुष्टं तु घोषणा ।

1. घोषणा (स्त्री)

1. கோஷணா (பெ-ஆ) தண்டோராப்போட்டு பேரொலியோடு அறிவித்தல்.

काकुः स्त्रियां विकारो यः शोकभीत्यादिभिः ध्वनेः ।। 183

1. काकुः (स्त्री)

1. காகு: (பெ-உ) துயரம் காரணமாகவோ, பயம் காரணமாகவோ கூச்சலிடுதல்.

अवर्णाक्षेपनिर्वादपरिवादापवादवत् ।
उपक्रोशो जुगुप्सा सा कुत्सा निन्दा च गर्हणे ।। 184

1. अवर्णः (पुं), 2. आक्षेपः (पुं), 3. निर्वादः, (पुं), 4. परिवादः (पुं), 5. अपवादः (पुं), 6. उपक्रोशः (पुं), 7. जुगुप्सा (स्त्री), 8. कुत्सा (स्त्री), 9. निन्दा (स्त्री), 10. गर्हणम् (न).

1. அவர்ண: (பு-அ) ஏச்சு
2. ஆக்ஷேப: (பு-அ) எதிர்வாதம்
3. நிர்வாத: (பு-அ) உண்மையை இல்லை என்று சாதித்தல்
4. பரிவாத: (பு-அ) தவறான குற்றச்சாட்டு

5. அபவாத: (பு-அ) காரணமில்லாத குற்றச்சாட்டு
6. உபக்ரோச: (பு-அ) ஏச்சு
7. ஜுகுப்ஸா (பெ-ஆ) வெறுப்பைக் காட்டுவது
8. குத்ஸா (பெ-ஆ) ஏச்சு
9. நிந்தா (பெ-ஆ) ஏச்சு
10. கர்ஹணம் (ந-அ) ஏச்சு

पारुष्यमतिवादः स्यात् . . . .

1. पारुष्यं (न)

1. பாருஷ்யம் (ந-அ) மரியாதை மீறிக் கடுமையாகப் பேசுவது.

. . . . भर्त्सनं त्वपकारगीः ।

1. भर्त्सनं (न).

1. பர்த்ஸநம் (ந-அ) 'தொலைத்துவிடுவேன்' என்று அதட்டுதல்.

यः सनिन्द उपालम्भस्तत्र स्यात् परिभाषणम् ।। 185

1. उपालम्भः (पुं), 2. परिभाषणम् (न)

1. உபாலம்ப: (பு-அ) (பெரியோரான) நீங்களே இப்படிச் செய்யலாமா? என்று நொந்து கொள்வது.
2. பரிபாஷணம் (ந-அ) தீயவரான நீங்கள் இப்படித்தானே செய்வீர்கள் ? என்று சாடுவது.

तत्र त्वाक्षारणा यः स्यादाक्रोशो मैथुनं प्रति ।

आक्षारणा (स्त्री)

1. ஆக்ஷாரணா (பெ-ஆ) பரபுருஷனைப் பெண்ணும், பரஸ்த்ரீயை ஆணும் கலவிக்கு அழைப்பது.

स्यादाभाषणमालापः . . . .

1. आभाषणम् (न), 2. आलापः (पुं)

1. ஆபாஷணம் (ந-அ) உரையாடுதல்
2. ஆலாப: (பு-அ) உரையாடுதல்

. . . . प्रलापोऽनर्थकं वचः ।। 186

1. प्रलापः (पुं)

1. ப்ரலாப: (பு-அ) பிதற்றல்.

अनुलापो मुहुर्भाषा . . . .

1. अनुलापः (पुं)

1. அநுலாப: (பு-அ) வழிமொழிவது.

. . . . विलापः परिदेवनम् ।

1. विलापः (पुं), 2. परिदेवनम् (न)

1. விலாப: (பு-அ) அழுகை
2. பரிதேவநம் (ந-அ) அழுகை

विप्रलापो विरोधोक्तिः . . . . . .

1. विप्रलापः (पुं), 2. विरोधोक्तिः (स्त्री)

1. விப்ரலாப: (பு-அ) மறுத்துக் கூறுதல்
2. விரோதோக்தி: (பெ-இ) மறுத்துக் கூறுதல்

. . . . . . संलापो भाषणं मिथः ।। 187

1. संलापः (पुं)

1. ஸம்லாப: (பு-அ) பலர்கூடிப் பேசுதல்

सुप्रलापः सुवचनं . . . .

1. सुप्रलापः (पुं), 2. सुवचनम् (न)

1. ஸுப்ரலாப: (பு-அ) 'ஆம்' என்று ஏற்றுக்கொள்ளுதல்.
2. ஸுவசநம் (ந-அ) " " "

. . . . अपलापस्तु निह्नवः ।

1. अपलापः (पुं), 2. निह्नवः (पुं)

1. அபலாப: (பு-அ) ஒருவர் கூறுவதை இல்லை/அல்ல என்று மறுத்தல்.
2. நிஹ்நவ: (பு-அ) " " " " "

(चोद्यमाक्षेपाभियोगौ शापाक्रोशौ दुरेषणा ।
अस्त्री चाटु चटु श्लाघा प्रेम्णा मिथ्याविकत्थनम् ।। 188

1. चोद्यं (न) 2. आक्षेपः (पुं) 3. अभियोगः (पुं) 4. शापः (पुं) 5. आक्रोशः (पुं), 6. दुरेषणा (स्त्री), 7. चाटु (पुं / न), 8. चटु (पुं / न), 9. श्लाघा (स्त्री).

1. சோத்யம் (ந-அ) ஒருவர் கூறுவதை (சந்தேகப்பட்டு) அப்படியா ? என்று கேட்பது.
2. ஆக்ஷேப: (பு-அ) மறுத்துக் கூறுதல்
3. அபியோக: (பு-அ) குற்றச்சாட்டு
4. சாப: (பு-அ) குற்றச்சாட்டை வன்மையுடன் மறுப்பது.
5. ஆக்ரோச: (பு-அ) " " "
6. துரேஷணா (பெ-ஆ) " "
7. சாடு (பு-உ) மனதிற்கினிய பேச்சு
8. சடு (பு-உ) " "
9. ச்லாகா (பெ-ஆ) அன்பினால் மிகையாகப் புகழ்வது.)

सन्देशवाग् वाचिकं स्याद् . . . .

1. संदेशः (पुं), 2. वाचिकं (न).

1. ஸந்தேச: (பு-அ) வாய்மொழிச் செய்தி.
2. வாசிகம் (ந-அ) " "

. . . . वाग्भेदास्तु त्रिषूत्तरे ।। 189

பின்வரும் சொற்களின் வகை, செய்திச்சொல்லுக்கு ஏற்றவாறு மூன்று லிங்கங்களிலும் வரும்.

रुशती वागकल्याणी स्यात् . . . .

1. रुशती (स्त्री), 2. अकल्याणी (स्त्री).

1. **ருசதீ** (பெ-ஈ) அமங்களச் செய்தி

2. **அகல்யாணி** (பெ-இ) அமங்களச் செய்தி

. . . . कल्या तु शुभात्मिका ।

1. कल्या (स्त्री)

1. **கல்யா** (பெ-ஆ) நற்செய்தி

अत्यर्थमधुरं सान्त्वं . . . .

1. सान्त्वं (न)

1. **ஸாந்த்வம்** (ந-அ) மிக இனிமையான ஆறுதல் சொல்

. . . . . . संगतं हृदयंगमम् ।। 190

1. संगतं (न), 2. हृदयंगमं (न)

1. **ஸங்கதம்** (ந-அ) பொருத்தமான சொல்

2. **ஹ்ருதயங்கமம்** (ந-அ) மனதிற்கு இதமான சொல்.

निष्ठुरं परुषं . . . .

1. निष्ठुरं (न), 2. परुषं (न)

1. **நிஷ்டுரம்** (ந-அ) கொடுமையான சொல்

2. **பருஷம்** (ந-அ) கொடுமையான சொல்.

. . . . . ग्राम्यमश्लीलं . . . .

1. ग्राम्यम् (न), 2. अश्लीलम् (न)

1. க்ராம்யம் (ந-அ) கொச்சைச்சொல்

2. அச்லீலம் (ந-அ) அமங்களமான சொல்

. . . . . . सूनृतं प्रिये सत्ये . . . . .

1. सूनृतम् (न)

1. ஸூந்ருதம் (ந-அ) உண்மையானதும், மனதிற்கு இனிமை யானதுமான சொல்.

. . . . . अथ संकुलक्लिष्टे परस्परपराहते ।। 191

1. संकुलं (न), 2. क्लिष्टं (न)

1. ஸங்குலம் (ந-அ) முன்னுக்குப்பின் முரணான சொல்

2. க்லிஷ்டம் (ந-அ) " " "

लुप्तवर्णपदं ग्रस्तं . . . .

1. ग्रस्तं (न)

1. க்ரஸ்தம் (ந-அ) முழுமையாகச் சொல்லப்படாத சொல்

. . . . निरस्तं त्वरितोदितम् ।

1. निरस्तम् (न), 2. त्वरितोदितम् (न)

1. நிரஸ்தம் (ந-அ) உளரல்

2. த்வரிதோதிதம் (ந-அ) உளரல்

अम्बूकृतं सनिष्ठीवं . . . .

1. अम्बूकृतं (न), 2. सनिष्ठिवं (न)

1. அம்பூக்ருதம் (ந-அ) தாம்பூலம் நிரம்பிய வாயினால்

2. ஸநிஷ்டீவம் (ந-அ) குழறிப்பேசுவது.

. . . . . अबद्धं स्यादनर्थकम् ।। 192

1. अबद्धम् (न)

1. அபத்தம் (ந-அ) பொருளில்லாத சொல்

अनक्षरमवाच्यं स्यात् . . . . . .

1. अनक्षरम् (न), 2. अवाच्यम्

1. அநக்ஷரம் (ந-அ) வாயும் கூசுகின்ற சொல்லத்தகாத சொல்.
2. அவாச்யம் (ந-அ) " " " "

. . . . . . आहतं तु मृषार्थकम् ।

1. आहतं (न)

1. ஆஹதம் (-அ) தவறை அடித்துக் கூறுவது. நடக்கமுடியாத செயலை, நடந்ததாக அடித்துக்கூறுவது. 'முயலுக்கு மூன்று கால்கள்தான்' என்பதுபோல.

[सोल्लुण्ठनं तु सोत्प्रासं . . . .

1. सोल्लुण्ठनं (न), 2. सोत्प्रासं (न)

1. ஸோல்லுண்டநம் (ந-அ) பரிஹாஸமாக எதிர்மறையாகப்
2. ஸோத்ப்ராஸம் (ந-அ) பேசுவது.

. . . . . . मणितं रतिकूजितम् । 193

1. मणितं (न)

1. மணிதம் (ந-அ) ஆண்- பெண் கலவியின்போது எழுகின்ற ஒலி.

श्राव्यं हृद्यं मनोहारी . . . .

1. श्राव्यं (न), 2. हृद्यं (न), 3. मनोहारी (न)

1. ச்ராவ்யம் (ந-அ) கேட்கத்தக்கது
2. ஹ்ருத்யம் (ந-அ) இதயத்திற்கு இதமானது
3. மநோஹாரி (ந-இ) மனதைக் கவர்வது.

. . . . . . विस्पष्टं प्रकटोदितम् ।। 194

1. विस्पष्टं (न), 2. प्रकटोदितम् (न)

1. **விஸ்பஷ்டம்** (ந-அ) ஒளிவுமறைவில்லாத பேச்சு.

2. **ப்ரகடோதிதம்** (ந-அ) வெளிப்படையான பேச்சு.]

अथ म्लिष्टमविस्पष्टं . . . .

1. म्लिष्टम् (न), 2. अविस्पष्ठम् (न)

1. **ம்லிஷ்டம்** (ந-அ) தெளிவற்ற சொல்.

2. **அவிஸ்பஷ்டம்** (ந-அ) " "

. . . . . . वितथं त्वनृतं वचः ।

1. वितथम् (न)

1. **விததம்** (ந-அ) பொய் - வீண் சொல்

सत्यं तथ्यमृतं सम्यगमूनि त्रिषु तद्वति ।। 195

1. सत्यं (न), 2. तथ्यं (न), 3. ऋतं (न), 4. सम्यक् (अव्ययं)

1. **ஸத்யம்** (ந-அ) உண்மை

2. **தத்யம்** (ந-அ) "

3. **ர்ருதம்** (ந-அ) "

4. **ஸம்யக்** (அவ்யயம்) இவை அடைமொழியாகச் சேர்கின் சொல்லுக்குரிய லிங்கத்தைப் பெறும்.

।। इति वाग्वर्गः ।।

சொல்வர்கம் முற்றிற்று.

६. अथ शब्दादिवर्गः ஓசைகளின் வர்கம்

शब्दे निनादनिनदध्वनि ध्वानरवस्वनाः ।
स्वाननिर्घोषनिर्ह्रादनादनिस्वाननिस्वनाः ।। 196
आरवारावसंवारविरावा . . . .

1. शब्दः (पुं) 2. निनादः (पुं), 3. निनदः (पुं), 4. ध्वनिः (पुं), 5. ध्वानः (पुं) 6. रवं (न), 7. स्वनः (पुं), 8. स्वानः (पुं), 9. निर्घोषः (पुं), 10. निर्ह्रादः (पुं), 11. नादः (पुं), 12. निस्वानः (पुं), 13. निस्वनः (पुं), 14. आरवः (पुं), 15. आरावः (पुं), 16. संरावः (पुं), 17. विरावः (पुं).

1. சப்த: (பு-அ) சத்தம்
2. நிநாத: (பு-அ) மணி ஓசை
3. நிநத: (பு-அ) மணி ஓசை
4. த்வநி: (பு-அ) மணி ஓசையை அடுத்துவரும் அலை ஓசை.
5. த்வாந: (பு-அ) " " " " "
6. ரவம் (ந-அ) நடப்பது, ஓடுவது இவற்றின் ஓசை.
7. ஸ்வந: (பு-அ) தந்தி ஓசை.
8. ஸ்வாந: (பு-அ) தந்தி ஓசை.
9. நிர்கோஷ: (பு-அ) சிங்கத்தின் கர்ஜனை.
10. நிர்ஹ்ராத: (பு-அ) யானையின் பிளிரல்.
11. நாத: (பு-அ) மணி ஓசை.
12. நிஸ்வாந: (பு-அ) ஊதும் ஓசை.
13. நிஸ்வந: (பு-அ) ஊதும் ஓசை.
14. ஆரவ: (பு-அ) சந்தடி ஓசை.
15. ஆராவ: (பு-அ) சந்தடி ஓசை
16. ஸம்ராவ: (பு-அ) சந்தடி ஓசை.
17. விராவ: (பு-அ) சந்தடி ஓசை.

. . . . अथ मर्मरः ।
स्वनिते वस्त्रपर्णानां . . . .

1. मर्मरः (पुं)

1. மர்மர: (பு-அ) துணி-இலைகள் காற்றில் ஆடும்போது எழு ஓசை.

. . . . भूषणानां तु शिञ्जितम् ।। 197
निक्वाणो निक्वणः क्वाणः क्वणः क्वणनमित्यपि ।

1. शिञ्जितम् (न), 2. निक्वाणः (पुं), 3. निक्वणं (न)
4. क्वाणः (पुं), 5. क्वणः (पुं), 6. क्वणनम् (न).

1. சிஞ்ஜிதம் (ந-அ) சலங்கை, சிலம்பு, ஒட்டியாணம் இவற்றின் ஓசை.
2. நிக்வாண: (பு-அ) " " " "
3. நிக்வணம் (ந-அ) " " " "
4. க்வாண: (பு-அ) " " " "
5. க்வண: (பு-அ) " " " "
6. க்வணனம் (ந-அ) " " " "

वीणायाः क्वणिते प्रादेः प्रक्वाण प्रक्वणादयः ।। 198

1. प्रक्वाणः (पुं), 2. प्रक्वणः (पुं)

1. ப்ரக்வாண: (பு-அ) வீணா நாதம்.
2. ப்ரக்வண: (பு-அ) வீணா நாதம்.

நிக்வாண என்ற சொல்லிலுள்ள 'நி'யை நீக்கி 'ப்ர' என்று சேர்த்து ப்ரக்வாண:, ப்ரக்வண: முதலிய சொற்கள் வரும்.

कोलाहलः कलकलः . . . .

1. कोलाहलः (पुं), 2. कलकलः (पुं)

1. கோலாஹல: (பு-அ) பலர் சேர்ந்து பலவிதமாக எழுப்பும்
2. கலகல: (பு-அ) மகிழ்ச்சிக் கூச்சல்.

. . . . तिरश्चां वाशितं रुतम् ।

1. वाशितं (न), 2. रुतं (न).

1. வாசிதம் (ந-அ) பறவைகள் எழுப்பும் ஓசை.
2. ருதம் (ந-அ) " " "

स्त्री प्रतिश्रुत् प्रतिध्वाने . . . .

1. प्रतिश्रुत् (स्त्री), 2. प्रतिध्वाना (स्त्री)

1. ப்ரதிச்ருத் (பெ-த்) எதிரொலி
2. ப்ரதித்வாநா (பெ-அ) எதிரொலி

. . . . गीतं गानमिमे समे ।। 199

1. गीतं (न), 2. गानं (न)

1. கீதம் (ந-அ) பாட்டு
2. காநம் (ந-அ) பாட்டு

।। इति शब्दादिवर्गः ।।

ஓசைகளின் வர்கம் முற்றும்.

८. नाट्यवर्गः நாட்டியவர்கம்

இந்த நாட்டிய வர்கத்தில் வருகின்ற சொற்கள் அனைத்துமே **கலைச்சொற்கள்.** சங்கீதம், நடனம், நாடகம் முதலிய கலைகளின் நுட்பங்களைக் கூறும் சொற்கள். அவை சாதாரண உலகியல் நிகழ்ச்சிகளைக் குறிக்கும்போது பொருள் மாறுபடலாம். ஆனால், மேலே சொன்ன கலைகளைப் பற்றிக் கூறும் தருணத்தில் இங்கே கூறப்படும் பொருள்தான் பொருந்தும்.

निषादर्षभगान्धारषड्जमध्यमधैवताः ।
पञ्चमश्चेत्यमी सप्त तन्त्रीकण्ठोत्थिताः स्वराः ।। 200

1. निषादः (पुं), 2. ऋषभः (पुं), 3. गान्धारः (पुं), 4. षड्जः (पुं) 5. मध्यमः (पुं), 6. धैवतः (पुं), 7. पञ्चमः (पुं).

1. **நிஷாத:** (பு-அ) 'நி'
2. **ர்ருஷப:** (பு-அ) 'ரி'
3. **காந்தார:** (பு-அ) 'க'
4. **ஷட்ஜ:** (பு-அ) 'ஸ'
5. **மத்யம:** (பு-அ) 'ம'
6. **தைவத:** (பு-அ) 'த'
7. **பஞ்சம:** (பு-அ) 'ப'

இவை ஏழும் ஸங்கீதத்தின் ஸ்வரங்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றின் முதல் அக்ஷரமே அந்தந்த ஸ்வரத்தைக் குறிப்பிடுவதாக அமைகின்றன. அனால், இங்கே ச்லோக அமைப்பை மனதில் கொண்டு அமரசிம்மன் வரிசையை மாற்றிக் கொடுத்திருக்கிறார். - ஸ ரி க ம ப த நி - என்பதே ஸ்வரவரிசை.

काकली तु कले सूक्ष्मे . . . .

1. काकली (स्त्री)

1. காகலீ (பெ-ஈ) இனிய தாழ்ந்த மெல்லிய ஸ்வரம்.

. . . . . . ध्वनौ तु मधुरास्फुटे ।

कलः . . . .

1. कलः (पुं)

1. கல: (பு-அ) இனிமையான இனம்புரியாத ஒலி
கல: (பு-அ) கலா (பெ-ஆ) கலம் (ந-அ)

. . . . . . मन्द्रस्तु गम्भीरे . . . . . .

1. मन्द्रः (पुं / स्त्री / न)

1. மந்த்ர: (பு-அ) ஆழ்ந்த ஒலி (கீழ் ஷட்ஜம்)
மந்த்ரா (பெ-ஆ) ,,
மந்த்ரம் (ந-அ) ,,

. . . . तारोऽत्युच्चैस्त्रयस्त्रिषु ।। 201

1. तारः (पुं / स्त्री / न)

1. தார: (பு-அ) ஓங்கிய ஒலி (மேல் ஷட்ஜம்)
தாரா (பெ-ஆ) ,, ,,
தாரம் (ந-அ) ,, ,,

(नृणामुरसि मध्यस्थो द्वाविंशतिविधो ध्वनिः ।
स मन्द्रः कण्ठमध्यस्थस्तारः शिरसि गीयते ।।) 202

தொப்புளிலிருந்து உண்டான ஒலி மார்பில் உரையும்போது இருபத்திரண்டு தாழ்ந்தது முதல் ஓங்கியதுவரை படிப்படியாக உயர்ந்து ஒலிக்கிறது. அது தொண்டையில் உரையும்போது மந்த்ரம். மண்டையை எட்டும்போது தாரம்.

समन्वितलयस्त्वेकतालो . . . .

1. एकतालः (पुं)

1. ஏகதால: (பு-அ) குரல், வாத்யங்கள் இவற்றின் ஒலிகள் எல்லாம் ஒரு முளையை ஒருமித்து இணையும்போது ஏகதாளம் எனப்படும்.

. . . . वीणा तु वल्लकी ।
विपञ्ची सा तु तन्त्रीभिः सप्तभिः परिवादिनी ।। 203

1. वीणा (स्त्री), 2. वल्लकी (स्त्री), 3. विपञ्ची (स्त्री), 4. परिवादिनी (स्त्री),

1. **வீணா** (பெ-அ) வீணை
2. **வல்லகீ** (பெ-ஈ) வீணை
3. **விபஞ்சீ** (பெ-ஈ) ஸரஸ்வதிதேவியின் வீணை.
4. **பரிவாதிநீ** (பெ-ஈ) ஏழு தந்திகளுடன் கூடிய வீணை. வடநாட்டில் புகழ்பெற்ற ஸிதார்.

ततं वीणादिकं वाद्यमानद्धं मुरजादिकम् ।
वंशादिकं तु सुषिरं कांस्यतालादिकं घनम् ।। 204

1. ततम् (न), 2. आनद्धम् (न), 3. सुषिरं (न), 4. घनम् (न)

1. **ததம்** (ந-அ) வீணை முதலிய தந்தி வாத்யங்களில் மீட்டப்படும் ஒலி.
2. **ஆநத்தம்** (ந-அ) மிருதங்கம், பேரிகை போன்ற தோல் கருவிகள். தோல் பிணைக்கப்பட்டுத் தட்டப்பட்டு எழுகின்ற ஒலி.
3. **ஸுஷிரம்** (ந-அ) குழல், நாகஸ்வரம் போன்று துளைகளால் ஊதப்பட்டு எழுகின்ற ஒலி.
4. **கநம்** (ந-அ) ஜாலர் போன்ற பித்தளை, அல்லது வெண்கலத் தாளங்கள் ஒன்றுக்கொன்று தட்டப்படும்போது எழுகின்ற ஒலி.

चतुर्विधमिदं वाद्यं वादित्रातोद्यनामकम् ।

1. वादित्रम् (न), 2 आतोद्यम् (न)

1. **வாதித்ரம்** (ந-அ) இவ்விதம் வாசிக்கப்படுகின்ற நால்வகை
2. **ஆதோத்யம்** (ந-அ) வாத்யங்களின் கூட்டுச்சொல்

मृदङ्गा मुरजा . . . .

1. मृदङ्गः (पुं), 2. मुरजः (पुं)

1. ம்ருதங்கம் (பு-அ) மிருதங்கம்

2. முரஜ: (பு-அ) மிருதங்கம்

. . . . . भेदारत्वङ्क्यालिङ्ग्योर्ध्वकास्त्रयः ।। 205

1. अङ्की (पुं), 2. आलिङ्ग्य (पुं), 3. ऊर्ध्वकः (पुं).

1. அங்கீ (பு-ந்) மடியில் வைத்துக்கொண்டு வாசிப்பது.

2. ஆலிங்க்ய: (பு-ந்) மார்பில் அணைத்து வாசிப்பது.

3. ஊர்த்வக: (பு-அ) தலைக்கு மேலே தட்டி வாசிப்பது.

स्याद्यशः पटहो ढक्का . . . . . .

1. यशः पटहः (पुं), 2. ढक्का (स्त्री)

1. யச: படஹ: (பு-அ) புகழ் பரப்பும் முரசு.

2. டக்கா (பெ-அ) புகழ் பரப்பும் முரசு

. . . . भेरी स्त्री दुन्दुभिः पुमान् ।

1. भेरी (स्त्री), 2. दुन्दुभिः (पुं)

1. பேரீ (பெ-ஈ) மார்பில் கட்டிக்கொண்டு கோலினால் கொட்டுவது

2. துந்துபி: (பு-இ) " " "

आनकः पटहोऽस्त्री स्यात् . . . .

1. आनकः (पुं / न), 2. पटहः (पुं / न)

1. ஆநக: (பு-அ) ஆநகம் (ந-அ) தரையில்வைத்தோ காளையின் முதுகிலோ வைத்துக் கோலினால் தட்டப்படுவது.

2. படஹ: (பு-அ) " " " " "
படஹம் (ந-அ) " " " " "

ஆநகம் (ந-அ) வைத்துக் கோலினால் தட்டப்படுவது.
2. **படஹ:** (பு-அ) " " " " "
படஹம் (ந-அ) " " " " "

. . . . कोणो वीणादिवादनम् ।। 206

1. कोणः (पुं)

1. **கோண:** (பு-அ) கோட்டுவாத்யம் - சல்லரி வாத்யம் வாசிக்க உபயோகப்படும் கோல்.

वीणादण्डः प्रवालः स्यात् . . . . . .

1. प्रवालः (पुं)

1. **ப்ரவால:** (பு-அ) வீணையின் மெட்டுத்தண்டு.

. . . . ककुभस्तु प्रसेवकः ।

1. ककुभः (पुं), 2. प्रसेवकः (पुं)

1. **ககுப:** (பு-ப்) வீணையின் பானை - குடம்.
2. **ப்ரஸேவக:** (பு-அ) வீணையின் பானை - குடம்.

कोलम्बकः कायोऽस्या . . . .

1. कोलम्बकः (पुं)

1. **கோலம்பக:** (பு-அ) சுரைக்காய் போன்ற உடல் பாகம்

. . . . . उपनाहो निबन्धनम् ।। 207

1. उपनाहः (पुं), 2. निबन्धनम् (न)

1. **உபநாஹ:** (பு-அ) நாகபாசம் (கவைக்கடை) - தந்திகளை
2. **நிபந்தநம்** (ந-அ) இழுத்துக்கட்டுகிற பிணைகள்.

वाद्यप्रभेदा डमरुमड्डुडिण्डिमझर्झराः ।
मर्दलः पणवोऽन्ये च . . . .

1. டமரு: (பு-உ) உடுக்கை.
2. மட்டு: (பு-உ) உடுக்கை
3. டிண்டிம: (பு-அ) தவில்
4. ஜர்ஜர: (பு-அ) வீணை போன்ற தந்தி வாத்தியம்-ஜல்லரி- கோலினால் தட்டி வாசிக்கப்படும் லய வாத்தியம். (கெத்துவாத்யம்)
5. மர்தல: (பு-அ) மத்தளம்
6. பணவ: (பு-அ) செய்தி கூறுபவன் ஒலிக்கின்ற தமுக்கு.

. . . . . . नर्तकीलासिके समे ।। 208

1. नर्तकी (स्त्री), 2. लासिका (स्त्री)

1. நர்த்தகீ (பெ-ஈ) நாட்டியம் ஆடுபவள்
2. லாஸிகா (பெ-ஆ) நாட்டிய.ம் ஆடுபவள்

विलम्बितं द्रुतं मध्यं तत्त्वमोघो घनं क्रमात् ।

1. विलम्बितं (न), 2. द्रुतं (न), 3. मध्यं (न), 4. तत्त्वं (न), 5. ओघः (पुं), 6. घनं (न)

1. விலம்பிதம் (ந-அ) காலப்ரமாணத்தில் முதல் காலம்
2. த்ருதம் (ந-அ) மூன்றாவது காலம்
3. மத்யம் (ந-அ) நடுக்காலம்
4. தத்வம் (ந-அ) தத்தத் திமிகிட போன்ற சொற்கட்டுகள்
5. ஓக: (பு-அ) முத்தாய்ப்பு
6. கநம் (ந-அ) பல ஆவர்த்தங்களில் மாறுபட்ட கதி மாற்றம். பஞ்சநடைகள்.

तालः कालक्रियामानं लयः साम्यम् . . . .

1. तालः (पुं), 2. लयः साम्यम् (पुं)

1. தாள: (பு-அ) காலபிரமாணத்தைக் குறிப்பிடும் தாள ஓசை.
2. லய: ஸாம்யம் (பு-அ) ஓடாத தாமதமில்லாத-சீரான தாள கதி.

1. தாள: (பு-அ) காலபிரமாணத்தைக் குறிப்பிடும் தாள ஓசை.
2. லய: ஸாம்யம் (பு-அ) ஓடாத தாமதமில்லாத-சீரான தாள கதி.

. . . . अथास्त्रियाम् ।। 209

ताण्डवं नटनं नाट्यं लास्यं नृत्यं च नर्तने ।

1. ताण्डवं (पुं/न), 2. नटनं (पुं/न), 3. नाट्यं (पुं/न) 4. लास्यं (पुं/न), 5. नृत्यं (पुं/न), 6. नर्तनम् (पुं/न).

1. தாண்டவம் (பு/ந-அ) தண்டு மஹரிஷியால் வகுக்கப்பட்டது
2. நடநம் (பு/ந-அ) நடனம்
3. நாட்யம் (பு/ந-அ) "
4. லாஸ்யம் (பு/ந-அ) "
5. ந்ருத்யம் (பு/ந-அ) "
6. நர்த்தனம் (பு/ந-அ) "

तौर्यत्रिकं नृत्यगीतवाद्यं नाट्यमिदं त्रयम् ।। 210

1. तौर्यत्रिकं (न)

1. தௌர்யத்ரிகம் (ந-அ) 1. நடனம், 2. அதற்கேற்ற பாடல். 3. அதற்கேற்ற தாளவாத்யம். ஆக மூன்றின் கூட்டுச் சொல். (பொதுவாக ஆண்கள் ஆடுவதற்கு (நடம்) நடனம் என்றும், பெண்கள் ஆடுவதற்கு நாட்டியம் என்றும் மரபு உண்டு).

भ्रकुंसश्च भ्रुकुंसश्च भ्रूकुंसश्चेति नर्तकः ।
स्त्रीवेषधारी पुरुषो . . . .

1. भ्रकुंसः (पुं), 2. भ्रुकुंसः (पुं), 3. भ्रूकुंसः (पुं), 4. नर्तकः (पुं).

1. ப்ரகும்ஸ: (பு-அ) பெண் வேஷம் பூண்டு நர்த்தனம் ஆடுகிற ஆண்.

नाट्योक्तौ இனிவரும் சொற்கள் நாட்டியத்தில் ஈடுபட்டவர்களை மட்டும் பற்றியது.

. . . . . . गणिकाज्जुका ।। 211

1. गणिका (स्त्री), 2. अज्जुका (स्त्री)

1. **கணிகா** (பெ-ஆ) நாட்டியம் ஆடுகின்ற பெண்.
2. **அஜ்ஜுகா** (பெ-ஆ) " " "

भगिनीपतिरावुत्तो . . . .

1. भगिनीपतिः (पुं), 2. आवुत्तः (पुं)

1. **பகிநீபதி:** (பு-இ) கணிகையின் சகோதரியின் கணவன்.
2. **ஆவுத்த:** (பு-அ) " " "

. . . . भावो विद्वान् . . . .

1. भावः (पुं)

1. **பாவ:** (பு-அ) நட்டுவனார்

. . . . अथावुकः ।

जनको . . . .

1. आवुकः (पुं)

1. **ஆவுக:** (பு-அ) கணிகையின் தகப்பனார்

. . . . युवराजस्तु कुमारो भर्तृदारकः ।। 212

1. युवराजः (पुं), 2. कुमारः (पुं), 3. भर्तृदारकः (पुं)

1. **யுவராஜ:** (பு-அ) கணிகையின் காதலன்
2. **குமார:** (பு-அ) " "
3. **பர்த்ருதாரக:** (பு-அ) " "

राजा भट्टारको देवः . . . .

1. राजा (पुं), 2. भट्टारकः (पुं), 3. देवः (पुं)

1. ராஜா (பு-ந்) அரசன் - ராஜா
2. பட்டார: (பு-அ) பட்டாரகன்
3. தேவ: (பு-அ) தேவன்

. . . . तत्सुता भर्तृदारिका ।

1. भर्तृदारिका (स्त्री)

1. பர்த்ருதாரிகா (பெ-ஆ) அரசனின் பெண்.

देवी कृताभिषेकायां . . . .

1. देवी (स्त्री)

1. தேவீ (பெ-ஈ) முடிசூட்ட சிம்மாஸனத்தில் அமரும் ராணி.

. . . . इतरासु तु भट्टिनी ।। 213

1. भट्टिनी (स्त्री)

1. பட்டிநீ (பெ-ஈ) சிம்மாஸனத்தில் ஏறாத மனைவி

अब्रह्मण्यमवध्योक्तौ . . . .

1. अब्रह्मण्यम् (अव्ययं)

